**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09042025-9016

Volume: 9

Issue: 4

Month: April

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 19.01.2025

Accepted: 26.03.2025

Published: 01.04.2025

Citation:
Nirmala, S., and A. Mariasebastin. "Women's Life in the Five Fold." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 4, 2025, pp. 67–76.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i4.9016

*Corresponding Author:
nirmala.s2022@vitstudent.ac.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Women's Life Philosophy in the Five Landscapes

**S. Nirmala**
*Research Scholar, Department of Tamil*
*Social Science and Language School, VIT University, Vellur*

**A. Mariasebastin**
*Assistant Professor, Department of Tamil*
*Social Science and Language School, VIT University, Vellur*
*https://orcid.org/0009-0009-0453-9672*

**Abstract**
*The world is made up of five Buddhas. Nature has evolved with various forms on its surface. Forest, mountain, plain, sea, sandy plain are located in this landscape. Ancient women lived their lives in harmony with nature, dividing them according to the fivefold nature, naming them according to their environment, and understanding their profession. Women do many jobs for the betterment of their family and support men and feel their duty. Kurinchi land has a hunting community system, Mullai land has a cattle community system, Maruta land has an agricultural community system and Weaving land has a trading community system. Kurinji and Mulla will be marked as Tripe Palai Land and Midwan. Through the five parts divided in this way, the civilization, location, customs, festivals, professions etc. of the people can be known. A girl lives under the protection of a nartai from childhood and after a certain period under the protection of her respective chief. The purpose of this article is to explore the careers and life evolutions of such women and to take their five-dimensional lifestyle and world life thoughts.*

***Keywords:*** *Aindhanai, Kurinji, Mullai, Marutham, Weaving, Milk, Life, Woman, Occupation*

**References**

1. Divakaram (First Volume), Edited by M. Shanmugapillai E. Sundaramurthy, First Edition 1990, Director, Publications, University of Madras, Chennai 600 005.
2. Tamil Surangam.com (Tamil surangam.com/litertures/pattu-paddu/kurinji Pattu HTML
3. Thamizhannal-Kurinjipattu (Interpretation of Literary Criticism)
4. Rangasamy – K. Kapilar, Sahitya Akademi, New Delhi
5. Sangam Literature - New Century Book House (P) Ltd., Chennai.

# ஐந்திணையில் பெண் வாழ்வியல்

***சே. நிர்மலா***
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி
வி.ஐ.டி, பல்கலைகழகம், வேலூர்

***முனைவர் அ. மரிய செபஸ்தியான்***
உதவிப் பேராசியர் சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி
வி.ஐ.டி, பல்கலைகழகம், வேலூர்

***ஆய்வுச்சுருக்கம்***
*ஐம்பூதங்களால் நிறைந்த இவ்வுலகம். இயற்கை புவிப்பரப்பில் பல்வேறு வடிவங்களால் பரிணமித்துள்ளது. காடு, மலை, சமவெளி, கடல், மணல்வெளி என்று புவிபரப்பானது அமைந்துள்ளது.சங்கச் சமூகத்தினர் இயற்கையோடு இணைந்தும், ஐந்திணை இயல்புக்கு ஏற்ப பகுத்தும், அந்தந்த சூழலுக்கு ஏற்ப பெயரிட்டும், தொழில் புரிந்தும் வாழ்வினை மேற்கொண்டனர். சங்கப் பெண்கள் குடும்ப அமைப்பில் பல தொழில்களைச் செய்து ஆண்களுக்கு இணையாக, அவர்கள் வாழ்வியல் சூழலை முன்னெடுப்பவர்களாக இருந்தனர். குறிஞ்சி நிலத்தில் வேட்டை சமூக அமைப்பும், முல்லை நிலத்தில் கால்நடை சமூக அமைப்பும், மருத நிலத்தில் வேளாண்மை சமூக அமைப்பும், நெய்தல் நிலத்தில் வணிக சமூக அமைப்பும் இருக்கின்றன. குறிஞ்சியும், முல்லையும் தம் நிலைகெட்டுத் திரிந்த திரிபே பாலை நிலம் என்றும், நடுவண் என்றும் குறிக்கப்படும். ஐந்திணை வழியே மக்களின் நாகரிகம், இருப்பிடம், பழக்கவழக்கங்கள், திருவிழாக்கள், தொழில்கள் போன்றவைகளை அறியமுடிகின்றது. சங்கப் பெண்களின் ஐந்திணை சார்ந்த வாழ்க்கை முறையையும் வாழ்வியல் சார்ந்த சிந்தனைகளையும் எடுத்தாய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***திறவுச் சொற்கள்:*** *ஐந்திணை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, வாழ்வியல், பெண், தொழில், சங்க இலக்கியம், திறனாய்வு.*

## குறிஞ்சி

மலையும் மலைச் சார்ந்த இடமும் குறிஞ்சி திணையாகும். குறிஞ்சி நிலப் பெண்களை கொடிச்சியர், குறத்தியர் எனத் திவாகரம் குறிப்பிடுகின்றது.

**கொடிச்சியர், குறத்தியர், குறிஞ்சிநில பெண் பெயர் (பா.எ-291)**

குறிஞ்சி நிலப்பகுதியை குன்றம், கல், மலை, வரை, சிலம்பு, வெற்பு, சாரல் என குறிக்கும் சொற்கள் ஐங்குறுநூற்றுப் பாடலில் அமைந்துள்ளது.

**சாந்த நறும்புகை**
**தேங்கமழ் சிலம்பின் வரையகம் கமழும்**
**(பா.எ-253:1-2)**

குறிஞ்சி மக்கள் திணையையும், மூங்கில் நெல்லையும் பயிரிட்டு உணவாக உண்டு மகிழ்ந்து வாழ்ந்தனர். இந்நிலப் பெண்களின் தொழில்களை எடுத்துக்கூறும் கபிலர் பாடல் வரிகளில் எடுத்துக் கூறுகிறார்.

**நெல்கொள் நெடுவெதிர்க்கு அணந்த யானை**
**முத்த ஆர் மருப்பின் இறங்குகை கடுகப்ப**
**துய்த்தலை வாங்கிய புனிறு தீர் பெருங்குரல்,**
**நல் கோள் சிறு தினைப் படு புள் ஓப்பி**
**எல் பட வருதியர் என நீ விடுத்தலின்,.......**
**(குறிஞ்சிப்பாட்டு:35-39)**

விளைந்த மூங்கில் நெல் யானை போல் இருப்பதாகவும், தினைக்கதிர் யானையின் கைபோல் விளைந்திருக்கும் என்றும், கதிருக்கு மேல் இரண்டு தினையிலைத் தோகைகள் நிமிர்ந்திருப்பது தந்தங்கள் இருப்பது போலுள்ளது என்றும், யானையின் துதிக்கையிலுள்ள மடிப்பு வளைவுகள் தினைக்கதிர் திட்டுத் திட்டாகக் காணப்படுவதாகவும் உவமைப்படுத்தப்படுகின்றது. விளைந்த தினைக்கதிர்களை உண்ண வரும் பறவைகளை தலைவியும், தோழியும் ஓட்டிக் கொண்டிருந்து, பகல் பொழுது கழிந்த பின் வீடு திரும்புக என்று செவிலித்தாய் தினைப்புனம் காவலுக்கு அனுப்பிவைத்ததாக இப்பாடல் அமைகின்றனது.

பெரும்பாலும் பெண்களே தினைப்புனம் காவலில் அதிகளவு பங்கு வகிக்கின்றனர் என்று இலக்கியங்கள் தெள்ளிதின் உணர்த்துகின்றன. அவர்கள் தினைப்புனம் காக்க குழல், தட்டை, தழல், வில், அம்பு, கனை, நெகிழி, அடர், தண்ணுமை ஆகிய கருவிகள் தினைப்புனம் காவலுக்கு பயன்படுத்தப்பட்டன. குறிஞ்சி நிலத்தில் தினைப்புனம் காவல் காத்த சமயத்தில் கருவியிலிருந்து ஓசை எழுந்தமையை மதுரைக்காஞ்சி பாடல் வழி அறியலாம்.

***தினைவிளை சாரல் கிளிகடி பூசல்***
***மணிப்பூ அவரைக் குரூஉத்தளிர் மேயும்***
***ஆமா கடியும் காணவர் பூசல்***
***(மதுரைக்காஞ்சி: 291-293).***

தினைகளை உண்ணவரும் கிளிகளையும், மணிப்போன்ற நிறமுடைய அவரைக் கொடியினது தளிரை மேய வரும் காட்டுப் பசுவையும் விரட்டும் கானவரின் ஓசை ஒலித்ததாக குறிப்பிடப்படுகின்றது.

***புலியஞ் சிதண மேறிய யவண***
***சாரல் சூரல் தகைபெற வலந்த***
***தழலும் தட்டையும் குளிரும் பிறவும்***
***கிளிகடி மரபின் ஊழ்ஊழ் வாங்கி***
***(குறிஞ்சிப்பாட்டு:41-44)***

மரமேறும் புலிகூட அதில் ஏற அஞ்சும் தகைமையது அந்தப் பரண்பந்தல். அதன் மேல் இருந்துகொண்டு நாங்கள் தழல், தட்டை, குளிர் போன்ற இசைக் கருவிகளால் கிளிகளை ஓட்டிக் கொண்டிருந்தோம் என்று தலைவியும் தோழியும் கூறும் பாடலின் மூலம் அவர்கள் கருவிகளைப் பயன்படுத்தியதை அறியமுடிகின்றது.

பின்வரும் பாடல் மூலம் பகற்பொழுதில் வெயிலின் வெப்பத்தையும் பொருட்படுத்தாது பெண்கள் தினைப்புனம் காவல் காத்ததை அறியலாம்.

***கிள்ளை யோப்பியுங் கிளையிதழ் பறியாப்***
***பைவரி யல்குற் கொய்தழை தைஇப்***
***பல்வே றுருவின் வனப்பமை கோதையெம்***
***மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி***
***யெரியவி ருருவி னங்குழைச் செயலைத்***
***தாதுபடு தண்ணிழ லிருந்தன மாக***
***(குறிஞ்சிப்பாட்டு:101-105)***

தினைக்கதிர்களைக் கவர வரும் கிளிகளை ஓட்டிக்கொண்டிருக்கும் நேரத்தில் செடி கொடிகளை தளிரோடு பறித்துத் தழையாடையாக்கி இடுப்பாடை மறைய உடுத்தியதையும், குவிந்த பூக்களைத் தொடுத்து மாலை அணிந்துக் கொண்டதையும், பின்னிய கூந்தலும், உச்சிக் கொண்டையும் அழகு பெறுமாறு பூக்களைச் சூடிக் கொண்டதையும் அசோகமரத்தின் நிழலுக்காகத் தங்கியிருந்ததையும் குறிப்பிடுகிறது.

குறிஞ்சி நிலப் பெண்கள் தழல், தட்டை, குளிர், கவன் போன்ற கருவிகளைப் பயன்படுத்தியும், கிளிகளை ஓட்டுவதற்குக் கிளிகடி பாடலைப் பாடியும் காத்தல் தொழிலை மேற்கொண்டனர் என்பது தெளிவாகின்றது.

### முல்லை

காடும் காடு சார்ந்த இடம் முல்லை நிலமாகும். காட்டுப்பகுதியில் வாழ்ந்த பெண்கள் இடைச்சியர், ஆய்ச்சியர் என்று அழைக்கப்பட்டனர்.

***முல்லையாளர் கோவலர் இடையர்,***
***(சொல்லிய) வண்டர், பொதுவர், ஆன்***

**வல்லோர்,**
**குடவர், பாலர், தொறுவர், கோவிந்தர்,**
**அண்டர், கோபாலர், ஆயிர், அமுதர் என்று,**
**இங்கு இவை முல்லை நிலத்துவர்**
**பெயரே" (திவாகரம் பா;297)**

இப்பாடலில் குறிப்பிட்டுள்ளவை முல்லை நில மக்களின் பெயர்களாகும்.

முல்லை நிலத்துப் பெண்களை ஆய்ச்சியர், தொறுத்தியர், பொதுவியர், குடத்தியர், இடைச்சியர் என்றழைப்பதைப் பின்வரும் பாடலில் காணலாம்.

**ஆய்ச்சியர், தொறுத்தியர், பொதுவியர்,**
**குடத்தியர்,**
**(வாய்த்த) இடைச்சியர் முல்லை நில**
**மகளிர் (திவாகரம் பா;298)**

இந்நில பெண்களின் தொழிலானது வயலுக்குச் சென்று அவரை, துவரை, கேழ்வரகு போன்றவற்றை பயிரிடுதல், பசுக்களை மேய்த்தல், பாலில் கிடைக்கும் தயிர், மோர் ஆகியவற்றை விற்றல் போன்றவையாகும். கோ வை வளர்த்த முல்லை நிலத்து மக்கள் கோவலர் என்பதை இரா. இராசகோபாலன் தமிழக வரலாறும் பண்பாடும் எனும் நூலில் குறிப்படுகிறார். இதனையே ஆ.முத்துசாமி கோவலர் என்பதற்கு கையிலே கோலைக்கொண்டிருந்த காரணத்தால் இவர்கள் கோலயர் எனவும் அழைக்கப்பெற்றனர் என விளக்கம் கூறுகிறார். கோ-வினை மேய்ப்பவர்களைக் குறிக்கும் கோவலர் என்ற சொல், முல்லை வியன் புலன் பரப்பி, கோவலர் குறும் பொறை மருங்கின் நறும் பூ அயர, நல் ஆன் (அகம்14;7-9) என்ற அடிகளில் அமைந்துள்ளது. ஆநிரைகளைக் குழல் ஊதியோ, சீழ்க்கை ஒலி எழுப்பியோ அழைக்கும் மக்களைக் குறிப்பதாக கல்லாக் கோவலர் ஊதும், வல்லாய்ச் சிறுக் குழல் (அகம்74;16-17) மற்றும் அந்திக் கோவலர் அம்பனை இமிழ் இசை (அகம்124;14) எனும் அகநானூற்று வரிகள் சான்றாகின்றன.

சங்க இலக்கிய நூலான புறநானூற்றில் (பாடல்.எண்-339, 265) கோவலர் என்னும் சொல் கையாளப்பட்டுள்ளது. முல்லை நிலப் பெண்கள் தொழில்களை மையமாகக் கொண்டு ஆய்ச்சியர், கோவிந்தியர், இடைச்சியர், பொதுவியர் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக ஆயர்குலப் பெண்கள் ஆநிரைகளை வளர்ப்பதன் மூலம் பால், மோர், தயிர் ஆகியவற்றை விற்று தம் தேவைகளைப் பூர்த்திச் செய்திருக்கின்றனர்.

**நள் இருள் விடியல் புள்ளெழப் போகிப்**
**புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி**
**ஆம்பி வான்முகை அன்ன கூம்புமுகிழ்**
**உறையமை தீம்தயிர் கலக்கி நுரைதெரிந்து**
**புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ**
**நாள்மோர் மாறும் நல்மா மேனிச்**
**(பொரும்பாணாற்றுப்படை: 155-160)**

என்ற பாடலின் மூலம் விடியற்காலத்தில் பறவைகள் எழும்போதே ஆயர்குலப் பெண்கள் கண் விழித்து, புலியின் முழக்கம் போன்ற மத்தினை இழுத்து தயிரைக் கடைந்து, வெண்ணெய் எடுத்த மோரினைத் தயிர் படிந்த பானையில் இட்டு தலைச் சும்மாட்டின் மீது வைத்துக் கொண்டு பெண்கள் விற்பனை செய்துள்ளதை அறிய முடிகின்றது.

**அளைவிலை உணர்வின் கிளை உடன்**
**அருந்தி**
**நெய்விலைக்காட்டிப் பசும்பொன் கொள்ளாள்**
**எருமை நல்ஆன் கருநாகு பெறூஉம்**
**மடிவாய்க் கோவலர் குடிவயின் சேப்பின்**
**இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப்பு அன்ன**
**பசுந்திணை மூரல் பாலொடும் பெறுகுவிர்**
**(பெரும்பாணாற்றுப்படை:163-168)**

என்ற பாடலில் ஆய்ச்சியர் மோர் விற்கும் பொருட்டு வேற்று நில மக்களிடம் செல்லும் போது பணத்திற்குப் பதிலாக பொன், தானியம், எருமை ஆகியவைகளைப் பெற்றுக் கொண்டதைக் காணமுடிகின்றது.

பின்வரும் கலித்தொகை பாடலின் மூலம் முல்லை நிலப் பெண்கள் வேற்று நிலத்திற்கும் சென்று மோர் விற்றதை அறியமுடிகின்றது

***நிலை உயர் கடவுக்குக் கடம்பூண்டு தன் மாட்டும்***
***பலசூழும் மனத்தோடு பைதலேன் யான்***
***(பா.எ-46)***

ஆயர்குலப் பெண்கள் தங்கள் இல்லங்களில் இருக்கும் ஆவைப் பேணிக் காத்ததை, பின்வரும் பாடல் தெளிவுப்படுத்துகின்றது.

***முரன்தலை கழிந்த பின்றை மறிய***
***குளகு அரை யாத்த குறுங்கால் குரம்பைச்***
***செற்றை வாயில் செறிகழிக் கதவின்***
***கற்றை வேய்ந்த கழித் தலைச் சாம்பின்***
***அதளோன் துஞ்சும் காப்பின் உதள***
***நெடுந் தாம்பு தொடுத்த குறிந்தறி முன்றில்***
***கொடு முகத் துருவையொடு வெள்ளைச் சேர்க்கும்***
***இடுமுள் வேலி எடுப்படுவரை பின்***
***(பெருபாணாற்றுப்படை:147-155)***

ஆய்ச்சியர்கள் ஆடுகளை நன்கு கவனிக்கும் பொருட்டுத் தின்பதற்காகத் தழை, வைக்கோல் ஆகியவற்றை வழங்கியும், தாம்புக்கயிறுக் கொண்டு ஆடுகளை மேய்ச்சலுக்கு அழைத்தும் செல்வர். அது மட்டுமல்லாமல் அவர்கள் கிடாய்கள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள் போன்ற பலவகை ஆடுகளை வளர்த்தனர் என்பதையும் இப்பாடல் மூலம் அறியமுடிகின்றது. இவ்வாறாக முல்லை நில மகளிர் ஆநிரைகளையும், ஆடுகளையும் திறம்பட வளர்த்ததைப் பற்றியும் தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியவற்றை விற்றதையும், ஒரு சில சமயங்களில் மாற்றுப் பொருளாக பொன், தானியம், கன்று வாங்கியதைப் பற்றியும் அறியமுடிகின்றது.

**மருதம்**

மருத நிலமே நாகரிகம் தோன்றிய இடமாக கருதப்படுகின்றது. வயலும் வயல் சார்ந்த இடம் அல்லது நன்னீர் சூழ்ந்த மண்டலமே மருத நிலமாகும். மருத நிலத்தை தொல்காப்பியர் தீம்புனல் உலகம் என்று தொல்காப்பிய பொருளதிகாரத்தில் (அகத்-பா-எ:5) குறிப்பிடுகின்றார். மருத நிலத்தில் மண்வளம், நீர்வளம் மிகுதியாக இருந்தமையால் இப்பகுதி வேளாண்மை உற்பத்திக்கு ஏற்ற வகையில் காணப்படுகின்றது. மருத நிலப் பெண்கள் உழவுத் தொழிலில் ஈடுபட்டதைச் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. மருத நிலப் பெண் பெயர்களை திவாகரம் பாடல் பின்வருமாறு விளக்குகின்றது

***உழத்தியர், கடைசியர், ஆற்றுக்காலாட்டியர்,***
***அடுத்த கழனிக்கு அடைத்த மகளிர்***
***(பா-305)***

***மனைவி, கிழத்தி, இல்லாள், இல் என்ற***
***அனையவை மருதத் தலைமகட்கு ஆகும்***
***(பா-307)***

மருத நில மக்கள் உழவுத்தொழிலை சிறப்பிக்கும் விதமாக உழவு உலகிற்கு அச்சாணி (கு.எ.1032) என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். புறப்பொருள் வெண்பாமாலையாகிய இலக்கண நூலில் உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர், ஊரன், மகிழன், களமர் (புறப்-15) என்ற பெயர்களில் மருத நில மக்கள் அழைக்கப்பட்டமையை அறிய முடிகின்றது. இந்நில மக்கள் செந்நெல், வெண்நெல், மூங்கிலரிசி போன்ற பயிர்களை வேளாண்மை செய்வதை முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர்

இந்நில மக்கள் விவசாயத்தின் போது முதன்மைக் கருவியாக ஏர்கலப்பைப் பயன்படுத்தினர் என்பதைப் பின்வரும் பெரும்பாணாற்றுப்படை நூல் குறிப்பிடுகின்றது.

***குடிநிறை வல்சிச் செஞ்சா லுழவர்***
***நடைநவில் பெரும்பகடு புதவிற் பூட்டுப்***
***பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சி***
***லுடுப்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றித***
***தொடுப்பொறிந் துழுத துளர்படு துடவை***
***(பா:195-200)***

என்ற பாடலில் பெண்யானையினது பெரிய வாயினைப் போன்று அகன்றிருக்கின்ற பெரிய கலப்பையை வைத்து, எருதினைப் பூட்டி உழவு செய்து களைநீக்கி நிலத்தை சமன்படுத்தியதை அறியமுடிகின்றது.

சமன்படுத்தப்பட்ட வயல்களில் பெண்கள் நாற்றின் வேரினை மண்ணுக்குள் தமது விரல்களால் அழுத்தி நாற்று ஊன்றிடும் தொழிலில் ஈடுபட்டதை,

***மதிஉலைக் கொல்லன் முறிகொடிற் றன்ன***
***கவைத்தா ளலவ னளற்றளை சிதையப்***
***பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பிற்***
***காரேறு பொருத கண்ணகன் செறுவின்***
***னுழாஅ நுண்டொளி நிரவிய வினைஞர்***
***முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவீற்***
***(பா:210)***

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடல் விளக்கிறது. மருத நிலப் பெண்கள் பிடியினது தும்பிக்கையைப் போன்று பின்னிய கூந்தலை உடையவர்களாகவும், நன்கு வலிமைப் பொருந்திய உழவர்களுக்கு தங்கையாகவும் இருந்தனர் என்பதைச் சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

***வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தி***
***னுரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை***
***பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறுத்துத்***
***தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப***
***(பா.வ.189-192)***

என்ற பாடல் வரியில் எருதினைப் பூட்டி உழவு செய்யும் உழவரின் தங்கைமார்கள் தலைமுடி பின்னியிருப்பது யானையின் துதிக்கைப் போன்று வலிமை பெற்றிருக்கின்றன என்றும் அவர்கள் உலக்கைப் பூண் தேய நன்றாகக் குத்திச் சமைத்த வெண்பொங்கல் சோற்றுக்கு நண்டுக் குழம்பு ஊற்றிப் போடுவதை உழவர் உண்டனர் என்பதை அறியமுடிகின்றது.

***மகளிர் தழீஇய துணங்கையானும்***
***யாண்டும் காணேன், மாண் தக்கோனை***
***யானும் ஓர் ஆடுகள மகளே;என்கைக்***
***கோடு ஈர் இலக்கு என வளை நெகிழ்ந்த***
***பீடுகெழு குரிசிலும், ஓர் ஆடுகள மகளே***
***(குறுந்தொகை:பா.எ-31)***

என்ற பாடலில் இந்நிலப் பெண்கள் துணங்கைக் கூத்து ஆடுபவர்களாகவும், இக்கூத்தை மகிழ்ச்சிக் காலத்தில் அவர்கள் விருப்பதுடன் ஆடியுள்ளதையும் அறியமுடிகின்றது.

இல்லங்களில் பெண்களின் வாழ்க்கையை பெருபாணாற்றுப்படை பின்வருமாறு எடுத்துக்கூறுகின்றது.

***புதுவை வேய்ந்த கருவிகுடின் முன்றி***
***லவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல***
***கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉம்***
***(பா-225)***

என்ற பாடலில் குவிந்திருக்கும் குடிப் போன்ற உழவரின் குடில்கள் புதிய வைக்கோலால் வேயப்பட்டிருக்கும். அக்குடில் முற்றத்தில் உழத்தியர் அவல் இடிப்பர், அந்த ஒலியைக் கேட்டுப் பக்கத்தில் மேயும் கிளிகள் பறந்தோடும் என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வாறாக மருத நில ஆண், பெண் இருவரும் இணைந்து உழவுத் தொழிலை திறம்பட செய்பவர்களாகவும், குறிப்பாக இந்நில பெண்கள் மகிழ்ச்சிக் காலத்தில் கூத்தாடும் தொழிலில் ஈடுப்பட்டுள்ளதையும் அறியமுடிகின்றது.

### நெய்தல்

கடலும் கடல் சார்ந்தப் பகுதியும் நெய்தல் நிலமாகும். நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மகளிர்களை நுளைச்சியர், பரத்தியர், அளத்தியர் என்று திருஞானசம்பந்தம் நம்பியகப்பொருளில் கூறுகிறார்.

***நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்தியர்***
***அளவர் அளத்தியர் (பா.24)***
***திவாகரம் நூலிலும்***
***நுளைச்சியர், பரத்தியர், (நுரைக்) கடற்***
***பிணாக்கள் (பா-301)***

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் நுளைச்சியர், பரத்தியர், நுளைத்தியர், அளத்தியர் என்ற பெண் பெயர்கள் காணப்படவில்லை. நுளையர் மகள் (பா-60:4) என்றும் நுளையர் மடமகள் (பா-45:2) என்றும் திணைமாலை நூற்றைம்பதில் காணப்படுகின்றன. பரதவ மகள் (பா-45:3,பா-349:10) என்று நற்றிணையில் இரு இடங்களில் காணப்படுகின்றன.

நெய்தல் நிலத்தில் வாழும் பெண்கள் மீன் உணக்கல் (காய வைத்தல்), பறவைகளை ஓட்டுதல், மீன் விற்றல், உப்பு விளைவித்தல், உப்பு விற்றல் போன்ற தொழில்களில் ஈடுப்பட்டனர்.

பின்வரும் நற்றிணைப் பாடல் நெய்தல் நிலப் பெண்களின் தொழில்களை அழகாக எடுத்தியம்புகிறது.

***உரவுக் கடல் உழந்த பெரு வலைப்பரதவர்***
***மிகு மீன் உணக்கிய புது மணல் ஆங்கண்,***
***கல்லென் சேரிப் புலவற் புன்னை***
***விழுவு நாறு விளக்கு இணர் அவிழ்ந்து***
***உடன் கமழும் (நற் பா:63;1-4)***

இப்பாடலில் பரதவர் தாம் கொண்டு வந்த மீன்களை மணலில் காய வைக்கின்றனர். அதன் நாற்றம் பாக்கமெங்கும் (சிற்றூர்) வீசுகிறது. அருகிலுள்ள புன்னை மரத்தின் பூக்கள் மணம் வீசி, அந்நாற்றத்தை நறுமணமாக மாற்றுகிறது, இதன்மூலம் இந்நிலப் பெண்கள் மீன் உணக்கல் (காய வைத்தல்) தொழில் செய்ததை அறியமுடிகிறது. மேலும் இவர்கள் விற்றுத் தீர்ந்து மீதமுள்ள மீன்களையும், விற்பனைக்குரிய காலம் கடந்து பிடித்த மீன்களையும் உப்பிட்டு வெயிலில் காயவைப்பர்.

***நிணச் சுறா அறுத்து உணக்கல் வேண்டி***
***இனப் புள் ஓப்பும் (நற்.பா45;6-7)***

சுறா மீன்களைப் பல துண்டுகளாக வெட்டி மணற்பரப்பில் காயவைப்பர். அவற்றைப் பறவைகள் கவராமல் இருக்க மகளிர் காவல் காப்பர், இதனை பறவைகளை ஓட்டு' தொழில் எனக் கூறுவர், பரதவர் பிடித்து வந்த மீன்களைப் பரத்தியர் தலைச்சுமையாகத் தூக்கிச் சென்று விழாக்களிலும், அங்காடிகளிலும் விலைக் கூறி விற்றதையும், தமையன்மார்கள் ஓங்கி எழுந்த அலையில் பிடித்த சுறா மீன்களைத் தழையாடை அணிந்த தங்கையர், விழாக்கோலம் காணும் தெருக்களில் விற்று வருவதை இப்பாடல் மூலம் அறியமுடிகின்றது.

உப்பு விளைவிக்கும் பரதவர்கள் உப்பளவர்கள் என்பர். உப்பு நீரை ஒழுங்குப்படுத்தப்பட்ட சிறு சிறு பாத்திகளில் பாய்ச்சி உப்பை விளைவிப்பர். அவ்வாறு உற்பத்திச் செய்யப்பட்ட உப்பை உப்பளவர்கள் குன்று போல் குவித்து வணிகரது வருகைக்காகக் காத்திருப்பர். அந்த காலங்களில் உப்பு குவியல் மீது பரதவ இளமகளிர் ஏறி நின்று கடலில் இருக்கும் தந்தையரின் படகுகளை எண்ணுவர் என்று பின்வரும் நற்றிணை பாடல் விளக்குகின்றது.

***உவர் விளை உப்பின் உழாஅ உழவர்***
***ஒழுகை உமணர் வரும் பதம் நோக்கி***
***காணல் இட காவற் குப்பை***
***(பா.331;1-3).***

உப்பு விற்றல் தொழிலில் தந்தைக்கு துணையாக, மகள் உப்பு விற்ற செய்தியை அகநானூறு குறிப்பிடுகின்றது.

***சிறுகோல் எல்வளை தெளர்ப்ப வீசி***
***நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்***
***சேரி விலைமாறு கூறலின்,மனைய***
***விளிஅறி ஞெமலி குரைப்ப***
***மதற் கயல் மலைப்பின் அன்ன கண் எமக்கு***
***(பா.140;6-10)***

என்ற பாடலில் உமணரின் மகள் கைவளையல்கள் ஒலிக்கும்படி கைகளை வீசிக்கொண்டு சேரிக்குள் நுழைந்து நெல்லுக்கு ஏற்ற அளவினை உடையது எங்கள் உப்பு என்று சத்தமாகச் சொல்லிச் சென்றனர். அவ்வாறு செல்லும்போது நாய்கள் குரைக்கும் என்பதையும் அந்நேரத்தில் அவளின் அஞ்சிய விழிகளை நாய் கண்டதும் அமைதியானதாக தெரிவிக்கின்றது. இவ்வாறாக நெய்தல் நிலப் பெண்கள் உப்பு உணங்கள், உப்பு விற்றல், உப்புக்கு நிகராக நெல் வாங்குதல் போன்ற தொழில்கள் செய்ததை மேற்கண்ட பாடல்களின் மூலம் அறியமுடிகின்றது.

## பாலை

வறண்ட நிலப்பகுதியே பாலை நிலமாகும். உலகம் நான்கு நிலமாக அமைந்ததேயன்றிப் பாலையோடு சேர்த்து ஐந்து நிலமாக

அமையவில்லை. தமிழகத்துக்கு குறிஞ்சி, முல்லை நிலங்கள் தம் நிலைக்கெட்டுத் திரிந்த திரிபே, பாலை நிலம் என்று வழங்கப்படுகிறது. பாலை நிலத்திற்கென்று தனியொரு நிலம் கூறப்படவில்லை என்றாலும் பாலைக்கான ஒழுக்கத்தையும், அதன் கூறுகளையும் மற்ற நிலங்களைப் பற்றிக் கூறுவது போலவே கூறுகின்றனர். நடுவணது என்பது பாலையைக் குறிக்கும் சொல்லாகும். இதனை குறிக்கும்விதமாக தொல்காப்பியர்,

அவற்றுள்

**நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்**
**பகுதிரை வையம் பாத்திய பண்பே**
**(தொல்.அகத்:2)**

என்ற பாடல் வரியின் மூலம் விளக்குகிறார். பாலை நில மக்களை எயினர், எயிற்றியர் என அழைப்பர். இவர்களின் ஒழுக்கமான பிரிவு நிலைகளில் களவு, கற்பு என்ற உன்னதமான இரு நிலைகள் காணப்படுகின்றன. இவ்வொழுக்கத்திற்கு ஆண், பெண் என்ற பாகுபாடு கிடையாது. பாலை நிலத் தலைவன் அகவொழுக்கத்தில் சிறப்பிடம் பெற்றவனாகக் கருதப்படுகிறான். சங்கப் பாடல்களில் கற்புக் காலத்தில் நிகழ்கின்றப் பிரிவினை மிகைப்படுத்தியும், களவுக் காலத்தின் போது பிரிவினை குறைவாகவும் காட்டியுள்ளனர்.

பாலை நிலப் பெண்களின் பெயர்களை திவாகரம் பாடல் பின்வருமாறு கூறுகிறது.

**மறத்தியர், எயிற்றியர், வன்கட் பேதையர்**
**அனைத்தும் அந்நிலத்து அரிவையர் பெயரே**
**(பா-294)**

இப்பாடலில் பாலை நிலத்திற்குரிய தலைவியின் வாழ்க்கையானது விரும்பிய தலைவனோடு உடன்படுதல், மகிழ்ந்திருத்தல், உடன்போய் மீண்ட தலைவனின் நிலை, ஆகியவை தலைவியின் களவு வாழ்க்கையாக காட்டப்படுகின்றன. கற்புக் காலத்தில் தலைவனின் பிரிவை உலக இயல்பு கூறி ஏற்றல், பின் வருந்துதல், ஊர் அலர் கண்டு வெறுத்தல், தன்னைத் தேற்றும் தோழியிடம் கோபம் கொள்ளுதல், தலைவன் உடன் இல்லாததால் மதிமயங்கி பேசுதல், ஆற்றாமையினால் தூதுரைத்தல், தலைவனின் வேறுப்பட்ட மனதை நினைத்து வருந்து தல், கண்முன் நிகழும் காட்சிகள் வழியும் இல்வாழ்க்கையின் முக்கியத்துவம் அறியமுடிகிறது. பாலைத்திணையின் உரிப்பொருளாகிய பிரிதலும் பிரிதல் நிமித்தமும் என்பதற்கேற்ப தலைவன் தலைவியின் வாழ்க்கையில் துன்பம் ஊற்றெடுக்கும் அளவுக்கு பிரிவு நிகழ்ந்துள்ளது. பொருள் தேடும் நிமித்தமாக தலைவன் தலைவி பிரிவு ஏற்படுகின்றது என்றும் மானுட வாழ்க்கையில் தன் தலைவனை பிரிந்து வாழ்வது தலைவியின் கடமையாக இருக்கிறது என்றும் கூறப்படுகின்றது.

வீரம் மிக்க தலைவனோடு உடன்போக்கு செல்லும் தலைவி வேங்கைப்புலிகள் நடமாடும் காட்டுப்பகுதியை கடக்கும் போதும், பல்வேறு நிலங்களைக் கடக்க பயணம் மேற்படும்போதும் அவளுக்கு ஏற்படும் துன்பங்களை நினைத்து செவிலித்தாய் வருந்துவாள் என்று உள்ளுணர்வு உணர்த்தியதாகவும், வழியில் காண்பவரிடமெல்லாம் கண்டு சொல்லிச் செல்கிறாள் என்பதை பின்வரும் ஐங்குறுநூற்று பாடல் விளக்குகின்றது.

**கடுங்கட் காளையொடு நேர்ந்தேர் ஏறி**
**கொள்வல் வேங்கைய மலை பிறக்கு ஒழிய**
**வேறுபல் அஞ்சுரம் இறந்தனள் அவள் எனக்**
**கூறுமின் வழியோ! அறு செல் மாக்கள்**
**(பா.385)**

என்ற பாடலில் தலைவி, கொலைச்செயல் வல்ல வேங்கைகள் நிறைந்த மலையின் பின்னே தான் ஒரு மாவீரனுடன் செல்வதாகக் கூறுகிறாள். தலைவனுடன் செல்வதால் கொடிய வழியும் அவளுக்கு எளிமையாகத் தோன்றுகின்றது. அதன் மூலம்

மகிழ்ச்சியடைவதாகவும், தன்னம்பிக்கை ஊட்டும் விதத்தையும் பெற்றோருக்குத் தெரிவிப்பதாக அமைகின்றது.

தலைவன் பொருள் வழி பிரிவின் போது தலைவனின் தனிமைத்துன்பம் தன்னை வருத்தும் என்பதைத் தலைவி நன்கு அறிந்தவள். பொருள் தேடுவதற்கு உயர்ந்த நோக்கம் இருப்பதால் அதனை உணர்ந்த தலைவி மனம் குழப்பமடைகிறாள் பின்னர்த் தலைவன் நோக்கம் மிகுதியானது என எண்ணி அவள் பிரிவைத் துன்பமாகக் கருதவில்லை. பிரிந்தவன் குறித்த பருவம் வராத நிலையினையும் குறித்த காரணத்தையும் தன்னகத்தே கூறிக்கொள்கிறாள் என்பதை நற்றிணைப் பாடலில் அறியலாம்.

**இசையும், இன்பமும், ஈதலும் மூன்றும்**
**அசையுநர் இருந்தோர்க்கு அரும் புணர்வு**
**ஈண்டும் என**
**வினவையின் பிரிந்த வேறுபடு கொள்கை**
**(நற்றி.பா.214)**

தலைவனுக்குக்கிடைக்கும்புகழ், புகழின் மூலம் உண்டாக்கும் மகிழ்ச்சி தனக்குண்டானதாக மகிழ்கின்றாள். புகழ், இன்பம், ஈதல் பண்பு ஒன்று சேர யாருக்கு கிடைக்கும் அப்படிப்பட்ட ஒப்பற்ற நிலை தன் தலைவனுக்குக் கிடைப்பதால் தலைவி துன்பமாகக் கருதவில்லை என்பதைத் தெரிவிப்பதாக அமைகின்றது.

தலைவன் பொருள் தேடிச் சென்றதால் இன்பமுடன் வாழ்வதற்க்கேற்ற இளமைக் காலத்தில் தலைவி மனம் பெறாதவளாக புலம்புகிறாள். இளமையானது தலைவனுக்குப் பயன்படாமல் வீணாகப் போவதைக் கண்டு, கலங்கும் வகையில் தோழியிடம் கூறுவதை பின்வரும் நற்றிணை பாடல் விளக்குகின்றது.

**கன்றும் உண்ணாது, கலத்திலும் படாது,**
**நல் ஆன் தீம்பால் நிலத்து உக்க அங்கு,**
**எனக்கு ஆகாது, எண்ணைக்கும் உதவாது,**
**பசலை உணீஇயர் வேண்டும்**
**தீதிலை அல்குபுல் என் மாமைக் கவின்**
**(பா-27:1-5)**

என்ற பாடல் வரியில் தலைவன் இளைமையானது, பசுவின்பால் கன்றுக்கும் உதவாது, புரப்போக்கு பாத்திரத்திலும் கொள்ளாது பயனின்றி மண்ணில் சிந்தி அழிவதுப் போல அழிந்து கொண்டிருப்பதாகக் கூறுகிறாள். தலைவன் உடன் இல்லாததால், அவனுக்குப் பயன்படாத இளமை பசலையால் விரிம்பி உண்ணப்படுகிறது. தலைவி ஏக்கத்தில் வெளிப்படுத்திய இவ்உவமை அவளுடைய துன்பத்தின் நிலையைப் புலப்படுத்துகிறது. பாலை நில மகளிர் தொழிலானது தலைவனின் பிரிவில் ஏற்படும் துன்ப நிலையை அறியமுடிகின்றது.

## முடிவுரை

ஐந்திணை நிலங்களில் வாழ்ந்த பெண்கள் இயற்கையோடு இசைந்த தொழில்களைச்செய்து ஆண்களுக்கு உறுதுணையாக இருந்தனர். சங்கப் பெண்கள் வாழ்கையை இன்பமாகவும் இயல்பாகவும் வாழ எண்ணினர். சங்க இலக்கியப் பாடல்களில் ஐந்திணை நிலப் பெண்கள் மேற்கொண்ட தொழில்களையும் அறிய இயல்கிறது. குறிஞ்சி நில பெண்கள் தழல், தட்டை, குளிர், கவன் போன்ற கருவிகளை பயன்படுத்தி தினைப்புனம் காத்தல் தொழிலை செய்தமை அறிய முடிகின்றது. முல்லை நிலப் பெண்கள் கால்நடைகளை வளர்த்தல், தயிர், மோர், வெண்ணெய், நெய் போன்றவற்றை விற்றல் தொழிலைப் புரிந்துள்ளனர். மருத நிலப் பெண்கள் உழவுத் தொழிலில் நாற்று நடுதல், களை பறித்தல் தொழில்களையும் அவர்கள் கூத்தாடும் தொழிலிலும் ஈடுபட்டதைக் காணமுடிகின்றது. நெய்தல் நில பெண்கள் மீன் விற்றல், மீன் உணக்கல் (காய வைத்தல்) மற்றும் உப்பு விற்றல் செய்தமை அறிய முடிகிறது. பாலை நிலத்தில் தலைவன் வினைவழி காரணமாகத் தலைவியை விட்டு பாலை நிலத்தை கடந்த நிலையிலும், தலைவி உடன்போகும் நிலையையும் அறியமுடிகிறது. பல்வேறு தொழில்களில் தனது பங்களிப்பின்

கடமை அறிந்து ஆண்களுக்கு ஊன்று கோலாகவும் உறுதுணையாகவும் வாய்ந்தமையைக் காட்டுகின்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலங்களில் வேளாண்மை முதலான தொழில்களைச் செய்தும், பாலை நிலத்தில் வறண்ட சூழலிலும் பிரிதல் தன்மையை உணர்ந்தவளாகவும் இருந்தமையை அறிந்துகொள்ள முடிகின்றது.

## பார்வை நூல்கள்

1. திவாகரம் (முதல் தொகுதி), பதிப்பபாசிரியர் மு.சண்முகப்பிள்ளை இ.சுந்தரமூர்த்தி, முதல் பதிப்பு 1990, இயக்குனர், பதிப்பகம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை
2. தமிழ் சுரங்கம்.காம் (tamil surangam.com/ litertures/pattu&paddu/kurinji pattu html
3. தமிழண்ணல், குறிஞ்சிப்பாட்டு (இலக்கியத் திறனாய்வு விளக்கம்)
4. அரங்கசாமி, கா.கபிலர், சாகித்ய அகாடமி புதுடெல்லி
5. சங்க இலக்கியம்- நீயூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை.
6. குருநாதன். இராம, குறிஞ்சி காட்டும் சமுதாயம்
7. சண்முகபிள்ளை. மூ, சங்கத்தமிழர் வாழ்வியல்
8. அகநானூறு (மூலமும் உரையும்) புத்தகம் 1,2, செயபால் இரா.முனைவர், நீயூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை.
9. இரா. இராசகோபாலன், தமிழன் வரலாறு பண்பாடு (ப-70)
10. ஆ.முத்துசாமி-சங்க இலக்கியத்தில் ஆயர் (ப-14)
11. அகம் 14;7-9
12. அகம் 74;16-17
13. அகம் 124;14
14. அகம் 34;11-12
15. நாகராசன். வி, பத்துப்பாட்டு, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, 2004
16. பெரும்பாணாற்றுப்படை, ப 127-130
17. மேலது ப.189-192